டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 1.9.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 063 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# கால்நடை தொற்று நோய்களுக்கு முன்னுரிமை அளித்தல் குறித்த முக்கிய பயிலரங்கு நிறைவடைந்தது

புது தில்லி, ஆக.31

மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையுடன் இணைந்து உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கால்நடை தொற்று நோய்களுக்கு முன்னுரிமை அளித்தல் குறித்த 3 நாள் பயிலரங்கு புதுதில்லியில் வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக நிறைவடைந்தது.



இந்த நிகழ்வு ஐசிஏஆர் நிறுவனங்கள், கால்நடை பல்கலைக் கழகங்கள், மாநில கால்நடை பராமரிப்புத் துறைகள், சர்வதேச அமைப்புகள் உள்பட முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த 69 நிபுணர்களை ஒன்றிணைத்தது.

நிறைவு விழாவில் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை செயலாளர் அல்கா உபாத்யாயா சிறப்புரையாற்று கையில், விலங்கு ஆரோக்கியத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் தன்னம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

கால் & வாய் நோய் (எஃப்எம்டி), பெஸ்டே டெஸ் பெட்டிட்ஸ் ரூமினண்ட்ஸ் (பிபிஆர்), புருசெல்லோசிஸ் மற்றும் கிளாசிக்கல் பன்றி காய்ச்சல் ஆகிய 4 நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முன்னுரிமை அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்தத் திட்டங்கள் நாடு தழுவிய தடுப்பூசி இயக்கங்களால் ஆதரிக்கப்படுகின்றன. இது மத்திய அரசால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளைப் பயன்படுத்துகிறது என கூறினார்.

மேம்பட்ட தடுப்பூசி முயற்சிகள் நடந்து வரும் எட்டு மாநிலங் களில் எஃப்எம்டி இல்லாத மண்டலங்களை நிறுவுவதற்கான திட்டங்களையும் அல்கா உபாத்யாயா கோடிட்டுக் காட்டினார்.

விலங்கு ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னுரிமை நோய் பட்டியலை இறுதி செய்வதில் நிபுணர்களின் கூட்டு முயற்சிகள் மற்றும் அனைத்து பங்குதாரர் களின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

நிறைவு விழாவில் கால்நடை பராமரிப்பு ஆணையர் டாக்டர் அபிஜித் மித்ரா, கால்நடை சுகாதாரத் துறை இணைச் செயலாளர் சரிதா சவுகான், இந்தியாவுக்கான உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி தகாயுகி ஹகிவாரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விதை நேர்த்தி மற்றும் விதை சான்றிதழ் என்னும் தலைப்பின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது

சேலம், ஆக.31

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், வாழவந்தி பஞ்சாயத்தில் வேளாண்மை துறையின் கீழ் ஆத்மா திட்டத்தில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சியில் விதை நேர்த்தி மற்றும் விதை சான்றிதழ் என்னும் தலைப்பின் கீழ் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் விதை சான்று எவ்வாறு பெறுவது அதன் பயன்பாடு பற்றி முழுமையாக செயல் விளக்க முறையில் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் ப. தங்கராஜ் கலந்து கொண்டு வேளாண்மை






துறையில் செயல்படும் அனைத்து திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

உதவி விதை அலுவலர் இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதை சான்றிதழ் முக்கியத்துவம் அதன் பயன் பற்றி எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.ஷோபனா இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு செயல் விளக்க முறையில் விதை நேர்த்தி செய்முறை பற்றி செயல் விளக்க முறையில் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு:
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வட்டார அளவில் விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்

திருச்சி, ஆக.31

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம், மும்முடி சோழமங்கலம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் அட்மா திட்டத்தில் உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார், பேசுகையில் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், பாரதப் பிரதமரின் கௌரவ நிதி திட்டம், பசுந்தாள் விதைப்பு ,சம்பா நெல் சாகுபடி செய்தல், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், பயிர் காப்பீடு திட்டம் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் சம்பா சாகுபடிக்கு நெல் விதை, சிங் சல்பேட், ஜிப்சம், திரவ உயிர் உரங்கள் மானிய விலையில் பெற்றுக்கொள்ள விவசாயிகளுக்கு விரிவாக விளக்கி கூறினார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் தே.தனசேகர் பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 75 சத மானிய விலையில் பழ செடி தொகுப்பு வழங்குதல், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயி களுக்கு நில போர்வை அமைத்தல் காய்கறிகள் சாகுபடி வெண்டை கத்திரி மிளகாய் சாகுபடி செய்தல் மானிய திட்டங்கள் பற்றியும் தேசிய தோட்டக் கலை இயக்கம் திட்டத்தின் கீழ் மா கொய்யா அடர் நடவு சாகுபடி, கிழங்கு வகை (சம்பங்கி) மலர்கள் சாகுபடி பசுமை குடில் அமைத்தல், நடமாடும் காய்கறி வண்டி வழங்குதல், மாநில தோட்டக்கலை மேம்பாடு திட்டத்தின் கீழ் மாடித்தோட்டம் பைகள், விதைகள் வழங்குதல், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாழை முட்டு கொடுத்தல் மானியம் வழங்குதல் பற்றியும், நுண்ணீர் பாசனம் திட்டம் பற்றி அட்மா திட்ட உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கி கூறினார்கள். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரி செல்வன் ஆலோசனை குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அட்மா திட்ட 2024-2025 ஆண்டில் பெறப்பட்ட 1வது தவணை தொகையில் விவசாயிகள் பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, பண்ணைப்பள்ளி இலக்கு விவரம் பற்றி விவசாயிகள், அட்மா திட்ட ஆலோசனை குழு உறுப்பினர்களுக்கு விளக்கி கூறி நன்றி தெரிவித்தார். இதற்கான ஏற்பாட்டினை அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக், தமிழ்மணி ஆகியோர் செய்து இருந்தார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 31.08.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 28 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 55 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 68 |
| 2 | வெண்டை | 22 | 26 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 16 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 15 | 60 | கேரட் | 95 | 100 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 58 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 50 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 22 | 28 | 63 | டர்னிப் | 25 | 30 |
| 8 | சுரைக்காய் | 18 | 24 | 64 | மு.கோஸ் | 28 | 32 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 28 | 32 | 66 | காளிபிளவர் | 42 | 46 |
| 11 | பூசணி | 15 | 20 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 190 | 298 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 38 | 70 | புருக்கோலின் | 180 | 200 |
| 15 | சி.வெங்காயம் | 36 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 55 |
| 16 | பெ.வெங்காயம் | 45 | 50 | 72 | குடமிளகாய் | 45 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 40 | 45 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 35 | 38 | 71A | | | |
| 20 | தேங்காய் | 34 | 36 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 45 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 135 | 145 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 75 | 80 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 60 | 65 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 30 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 55 | 60 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 24 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 66 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# இராமநாதபுரம் மாவட்ட டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கும் நிகழ்வு



இராமநாதபுரம், ஆக.31

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டாரத்திலுள்ள கமுதி கோட்டை மேடு யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள அரங்கில் 29.8.24 ரிலையன்ஸ் பவுண்டேன் சார்பில் நெல் மற்றும் நிலக்கடலை டிஜிட்டல் பண்னனை பள்ளி விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கும் நிகழ்வுடன் மானாவாரி நெல் சாகுபடிக்கான ஆயத்த பயிற்சியும் நடைபெற்றது. திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா அனைவரையும் வரவேற்று, ரிலையன்ஸ் பவுண்டேசன் செயல் பாடுகளையும் தகவல் பரிமாற்ற நிகழ்வு களையும் எடுத்துக் கூறினார். நிகழ்விற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ச.கண்ணையா தலைமை தாங்கி

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

பேசுகையில் மாவட்டத்திலுள்ள அனைத்து விரிவாக மையங் களிலும் போதுமான அளவு சான்று பெற்ற நெல் விதை இருப்பதாகவும் அதனை வாங்கி பயன்படுத்திட கேட்டுக் கொண்டார். அத்துடன் பண்ணை பள்ளி விவசாயி களுக்கு மண்வள அட்டை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாஸ்கர மணியன் கலந்து கொண்டு பேசுகையில், வேளாண் துறையில் செயல் படுத்தப்படும் மத்திய, மாநில நல திட்டங்களை எடுத்துக் கூறியும் அனைத்து விவசாயிகளும் தங்களுடைய பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன் பெற கேட்டுக் கொண்டார்.

கமுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சிவராணி பேசுகையில், கமுதி வட்டாரத்திலுள்ள செயல்படும் (KAVIADP) திட்ட செயல்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறினார்.

நிகழ்ச்சி ரீலையன்ஸ் பவுண்டேசன் வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் கூறுகையில், மானாவாரி நெல்லுக்கு விதை கடினப் படுத்துதல் மற்றும் விதை அமிர்தம் மூலம் நெல்லுக்கு விதை நேர்த்தி செய்து செயல்விளக்கமாக கட்டப்பட்டது. இந்நிகழ்வில் சேது சீமை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு நிர்வாகி தரைக்குடி முத்துராமலிங்கம், பாஸ்கரன் மற்றும்செயல் அலுவலர் நித்யா, கமுதி வட்டார BTM ஈஸ்வரி, ATM சுபாஷ் மற்றும் முன்னோடி உழவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான எற்பாடுகளை கள அலுவலர் லிபகா ராமு சிறப்பாக செய்திருந்தார்.



# இயற்கை முறையில் எலிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஆந்தை பந்து செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திண்டுக்கல், ஆக.31

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, அப்ஸானா சஃப்ரீன், முத்து ஸ்ரீ அபிராமி,




விசாலினி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் தேனி மாவட்டம் சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன் கோட்டையில் உள்ள நெல் விவசாயியை சந்தித்த போது அங்கு எலிகளின் தாக்கம் அதிகளவில் இருந்ததை கண்டறிந்தனர்.

அதனால் விவசாயிகளுக்கு இயற்கை முறையில் எலிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஆந்தை பந்து செய்து விவசாயி களுக்கு கொடுத்தனர்.

இதனை வயலில் நெல்லின் உயரத்திற்கு ஒரு அடிக்கு மேல் இருக்க வேண்டும். இதன் மூலம் பந்தில் உள்ள வெள்ளை மற்று கருப்பு நிறத்திற்கு ஆந்தை ஈர்ந்து அதில் அமர்ந்து எலிகளைப் பிடிக்கும். இதனால் வயலில் எலிகளின் நடமாட்டம் குறையும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஆடுகள் வளர்க்க 50% மானியம் மத்திய அரசின் திட்டம் பற்றி தெரியுமா?



கிராமப்புற மானாவாரி விவசாயிகளின் ATM-ஆக விளங்குவது ஆடு வளர்ப்பு மட்டுமே. விவசாயம் சில சமயங்களில் பொய்த்து போனாலும் ஆடு வளர்ப்பு விவசாயிகளின் வாழ்வாதாரமாக பல நேரங்களில் இருந்து வருவது நாம் அறிந்ததே.

நமது நாட்டின் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட மத்திய அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் அறிவிப்பு களையும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வங்கி (NABARD) மற்றும் பிற வங்கிகளோடு இணைந்து, ஆடு வளர்ப்புக்கான திட்டம் ஒன்றை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது என்பது பலருக்கும் தெரியாத நிலை தான். அதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

## ஆட்டு கறிக்கு ஏகப்பட்ட வரவேற்பு?

தற்போது கிராமப்புறங்களில் மட்டுமல்லாது நகர்ப் புறங் களிலும் ஆட்டிக்கறியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதுவும் விடுமுறை நாட்களில் அதிகாலையிலேயே கறிக்கடையில் கூட்டம் அலைமோதும். கறியின் விலையோ நாளுக்கு நாள் ஏறுமுகமாக தான் உள்ளது. (1 கிலோ கறி 1000). இதனால் ஆடுகளை விற்பனை செய்வதில் எந்த விதமான இடர்பாடுகள் கிடையாது. கையிலே பணம் உடனே கிடைக்கும்.

இதனால் கிராமப்புற மக்களிடம் குறிப்பாக கிராம மகளிர் கணவனால் கைவிடப்பட்டவர்கள் மாற்று திறனாளிகள் கூட ஆடுகள் வளர்ப்பில் அதிக ஆர்வத்தோடு ஈடுபடுகின்றனர். ஆடு வளர்ப்பில் ஈடுபட விருப்பமுள்ளவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மத்திய அரசின் இந்த திட்டமானது உத்யமித்ரா ‘நிலமற்ற விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு வளர்ச்சி (AHIDF) என்று அழைக்கப்படும் இந்த திட்டம் கால்நடை பாரமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படு கிறது.

**திட்டத்தின் செயல்பாடுகள்**

1) கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள மத்திய அரசின் தேசிய கால்நடை ஆணை யத்தின் கீழ், செம்மறி ஆடு வளர்ப்பதற்கான சிறப்பு மானி யமும் வழங்கப்படுகிறது.

அதன்படி விவசாயிகள் 100 ஆடுகள் முதல் 500 ஆடுகள் வரை வளர்க்கலாம். இதில் விவசாயிகளுக்கு 50% மானியம் கிடைக்கும்.

2) 100 ஆடுகள் வளர்க்க 20 லட்சம் வழங்கும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 2 முறை தலா 5 லட்சம் தள்ளுபடி வழங்கப் படுகிறது.




**ஆடு வளர்ப்பு**

200 ஆடுகள் வளர்ப்பதற்கு 40 லட்சமும், 300 ஆடுகளுக்கு 60 லட்சமும், 400ஆடுகளுக்கு 80 லட்சமும், 500ஆடுகள் வளர்ப்புக்கு 1கோடி திட்டமும் உள்ளது. இவை அனைத்திற்கும் 50% தள்ளுபடி உண்டு.

**எப்படி வாங்குவது? என்ன விபரம்?**

20 லட்சம் திட்டத்தில் இணைவதாக இருந்தால் விவசாயிகள் தங்களுடைய பங்காக 2 லட்சத்தை செலுத்திட வேண்டும். அதற்கு பிறகு வங்கியிலிருந்து 8 லட்சம் கடனாக பெற்றுக் கொள்ளவும். இதில் 25% தொகையை விவசாயிகள் செலவழித்த பிறகு தள்ளுபடி செய்யப்பட்ட 5 லட்சம் வங்கி கணக்கில் வரவு வைக்கப் படும், திட்டம் முடிவடைந்ததும், 2வது தவணையாக 5 லட்சம் தள்ளுபடி தொகை வரவு வைக்கப்படும்.

**இந்த திட்டத்தில் எப்படி சேர்வது தெரியுமா?**

இதற்காவே ‘ உத்யமித்ரா‘ திட்டத்தில் (https//nimudyamimitra.in) என்ற அதிகாரப்பூர்வமாக வெப்சைட் உள்ளது. இதில் ONLINE மூலமாக விண்ணப்பிக்கலாம்.

**தகுதிகள் என்ன?**

1) செம்மறி ஆடு வளர்ப்பு திட்டத்தில் பலன் பெற வேண்டுமானால் விவசாயிகள், பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில்‘ ஆடு வளர்ப்பதற் கான பயிற்சி‘யை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அதேபோல சம்மந்தப்பட்ட விவசாயிக்கு 1 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். அந்த நிலத்தின் மீது எவ்விதமான கடனும் பெற்றிருக்கக் கூடாது.

2) விவசாய நிலத்தின் கீழ் (KCC) கிசான் கிரெட் கார்டு இருந்தாலும்கூட இந்த திட்டத்தில் சேர முடியாது.

3) சொந்த நிலம் இல்லாவிட்டால், 10 வருடத்திற்கு நிலத்தை குத்தகைக்கு எடுத்தும் இந்த திட்டத்தில் இணையலாம். அதே போல நிலமற்ற விவசாயிகள், மகளிர் சிறு குறு விவசாயிகளும் இந்த ஆடு வளர்ப்பு மானியம் பெற விண்ணப்பிக்கலாம்.

**தகுதியானவர்களை தேர்வு செய்து எப்படி?**

ஆடு வளர்ப்பிற்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியுடையவர் களை தேர்வு செய்ய, கால்நடை சேர்ந்த குழுவானது ஆய்வு செய்து சமர்ப்பிக்கும் அறிக்கை பூர்த்தி செய்து வங்கிகளுக்கு அனுப்பப்படும். அதனை வங்கிகள் பரிசீலித்து, வங்கிகளின் நிபந்தனைக்கு உட்பட்டு விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி தெளிப்பு
1லி. நீருக்கு 5 மி.லி
IFFCO
NANO UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# சம்பா பருவத்திற்கேற்ற நெல் இரகங்களும், விதைப் பரிசோதனையின் அவசியமும்

விதை பரிசோதனை ஆய்வு என்பது விதையின் தரங்களான புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற இரககலப்பு போன்றவற்றை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் கிடைக்கச் செய்வதேஆகும். காலவரையறைக்குள் விதை ஆய்வை மேற்கொள்வதன் மூலம் விதைக் குவியல்களின் திறனை தெரிந்து கொள்ளலாம். விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் அனைவரும் விதை ஆய்வினை மேற் கொள்ள லாம். குறைந்த தரம் வாய்ந்த விதைகளை விதைப்பதன் மூலம் ஏற்படும் இடர்களை குறைப்பதே விதை ஆய்வின் நோக்கமாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சம்பா பருவத்திற்கேற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 54, கோ 52, விஜிடி 1, டி.கே.எம். 13, கோ (ஆர்) 50, டி.ஆர்.ஒய் 3, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி ஆகிய இரகங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

### ஆடுதுறை 54

வயது 130- 135 நாட்கள் பின் சம்பா மற்றும் தாளடி பருவங்களுக்கு ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 6305 கிலோ. வெள்ளை மத்திய சன்ன அரிசியை உடைய இரகம். சமைத்தப் பின் அரிசி நீளும் தன்மை கொண்டது. அமைலேஸ் என்ற மாவு பொருள் இடைப்பட்ட அளவில் இருப்பதால் சமைப்பதற்கு மிக சிறந்தது. இலை மடக்கு புழுவிற்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. குலை நோய் மற்றும் தண்டு துளைப் பானுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

### கோ 52

வயது 130- 135 நாட்கள். பின் சம்பா மற்றும் தாளடி பருவங் களுக்கு ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 6191 கிலோ. மத்திய சன்ன வெள்ளை நிறஅரிசியை உடையது. அதிக அரவைத் திறன் மற்றும் முழு அரிசி காணும் திறன் உடைய இரகம். புகையான் மற்றும் தத்துப்பூச்சிக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

குலை நோய், இலையுறை அழுகல் நோய், பழுப்பு புள்ளி நோய் மற்றும் இலையுறை கருகல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது.

**விஜிடி 1**

வயது 129 நாட்கள். சம்பா மற்றும் பின் சம்பா பருவத்திற்கு ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 5859 கிலோ. சன்ன வெள்ளை அரிசி மிதமான வாசனை உடையது. சமைத்தப்பின் அரிசி நீளும் தன்மை உடையது. இலைசுருட்டு புழு, குலை நோய் மற்றும் செம்புள்ளி நோய்க்கு நடு தரஎதிர்பபுத் திறன் கொண்டது.

**டி.கே.எம்.13**

வயது 130 நாட்கள். சம்பா மற்றும் பின் சம்பா பருவத்திற்கு ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 5938 கிலோ. மத்திய சன்ன வெள்ளை நிற அரிசியை உடையது. இலைசுருட்டு புழு, தண்டு துளைப்பான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் குலைநோய் மற்றும் துக்ரோ வைரஸ் நோய், செம்புள்ளி நோய் மற்றும் இலையுறை அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**கோ (ஆர்) 50**

வயது 130 -135 நாட்கள். பின் சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு ஏற்றது. சராச மகசூல் எக்டருக்கு 6338 கிலோ. மத்திய சன்ன அரிசி நல்ல அரவைத்திறன் உடையது. மித அமைலேஸ் மாவு பொருள் உள்ளதால் சமைப்பதற்கு ஏற்றது. குலைநோய், இலை உறை அழுகல் நோய், பழுப்பு புள்ளி நோய், பாக்டீரிய இலை கருகல் நோய், துங்ரோ நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது.

**டி.ஆர்.ஒய் 3**

வயது 135 நாட்கள். சம்பா பின் சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு ஏற்றது. உவர் நிலங்களில் சாகுபடிக்கு உகந்தது. மத்திய பருமன் அரிசி அதிக அரவைத்திறன் கொண்டது. சராசரி மகசூல் எக்டருக்கு 5833 கிலோ. இலைசுருட்டு புழு தண்டு துளைப்பான் மற்றும் புகையானுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. குலைநோய், இலைபழுப்பு புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய் மற்றும் இலை உறை கருகல் நோய் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் திறன் கொண்டது.

## மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி

வயது 130-135 நாட்கள். சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 5000 கிலோ. குலை நோய், துங்ரோவைரஸ் நோய், பாக்டீரியல் இலை கருகல் நோய், போன்றவற்றிற்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. மத்திய சன்ன அரிசியை உடையது. விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள நெல் விதைகளின் முளைப்புத்திறன் குறைந்தபட்சம் 80 சதவீதமும், புறத்தூய்மை குறைந்தபட்சம் 98 சதவீதமும், அதிகபட்ச ஈரப்பதம் 13 சதவீதத்திற்குள்ளும், பிற ரக கலவன் ஆதார விதைக்கு 0.05 சதவீதமும், சான்று விதைக்கு 0.2 சதவீதமும் உள்ளதா என்பதை அறிந்து விதைப்பு செய்தால் நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற முடியும்.

எனவே விவசாயிகள், நெல் விதையின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற இரக கலப்பு ஆகிய வற்றை அறிய 400 கிராம் விதைகளை துணிப்பையில் இட்டு, மேலும் ஈரப்பதம் அறிய தனியாக 100 கிராம் அளவு விதைகளை காற்றுப் புகாத பாலிதின் பையில் இட்டு பயிரின் இரகம் தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு திருச்சிராப்பள்ளி காஜாமலை அரசு பல்துறை கட்டிட வளாகம், காஜாமலை, திருச்சி 20 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்குரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி விதையின் தரத்தை தெரிந்து கொள்ளலாம். மேலும், விதையின் முளைப்புத் திறன் மட்டும் அறிந்து கொள்ள 40 கிராம் விதையை துணிப்பையில் இட்டு, மேற்கூறிய விபரங்களுடன் அனுப்பி பரிசோதனை செய்து கொண்டு விதைப்பு செய்வதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும் என திருச்சிராப்பள்ளி விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் ரெ.ரமா பிரபா நளினி ஆகியோர் கேட்டுக் கொண்டு உள்ளார்கள்.



# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள்

**உழவியல் முறைகள்**

அறுவடைக்குப் பின்பு நிலத்தை நன்கு ஆழமாக உழுது, நோயால் தாக்கப்பட்ட இலைகள் மற்றும் செடியின் பாகங்களை மண்ணிற்கு அடியில் புதைத்து விட வேண்டும். அதிக வரிசை இடைவெளி கொண்ட பயிர்களைக் கொண்டு பயிர் சுழற்சி செய்ய வேண்டும். (முன்பருவ, பின் பருவ இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு) கழுத்து அழுகல் நோயைக் கட்டுப்படுத்த அதிக ஆழத்தில் (2 அங்குலத்திற்கு மேல் மிகாமல்) விதைக்காமல் சரியான ஆழத்தில் விதைக்க வேண்டும்.



ஒரு ஏக்கருக்கு 200-400 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடுதல் வேண்டும். பருத்தி, மக்காச்சோளம், வெங்காயம் போன்ற பயிர்களைப் பயிர் சுழற்சி செய்ய வேண்டும். கம்பு, சோளம், மக்காச் சோளம் மற்றும் துவரையை ஊடுபயிராகப் பயிர் செய்யலாம்.

**விதை நேர்த்தி**

டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ விதைக்கு (அ) பேசில்லஸ் சப்டிலிஸ் 10 கிராம்/கிலோ விதைக்கு என்ற விகிதத்தில் விதை நேர்த்திச் செய்யலாம் அல்லது கார்பென்டாசிம் மருந்து 2 கிராம் / கிலோ விதைக்கு என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். ஓர் ஏக்கருக்கு 50 கிலோ தொழு உரத்துடன் 1 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி (அ) 1 கிலோ பேசில்லஸ் சப்டிலிஸ் கலந்து மண்ணில் இடுவதன் மூலம் மண் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.




**தெளித்தல்**

வேப்ப இலைச்சாறு 1 லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் விகிதம் தயாரித்துத் தெளிப்பதன் மூலம் இலையைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். விதைத்த 35 மற்றும் 70-ம் நாள் மேன்கோசெப் 2 கிராம்/லிட்டர் என்ற வீதமும், 60-ம் நாள் கார்பென்டாசிம் 2 கிராம்/லிட்டர் என்ற வீதமும் தெளிப்பதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம். கார்பென்டாசிம் 2 கிராம்/லிட்டர், மேன்கோசெப் 2 கிராம்/லிட்டர் வீதம் 2-3 வார இடைவெளியில் தெளிக்க வேண்டும். விதை விதைத்த 4-5 வாரங்கள் கழித்து 2 அல்லது 3முறை தெளிக்க வேண்டும். கார்பென்டாசிம் 2 கிராம்/லிட்டர் கொண்டு மண்ணை நனையச் செய்வதன் மூலம் மண் மூலம் பரவும் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

நச்சுயிரி நோய்களைக் கட்டுப்படுத்த (மொட்டுக் கருகல் மற்றும் ரோஜா இதழ் அடுக்கு நோய்) டைமீத்தோயேட் (அ) குயினால்பாஸ் 2 மி.லி. / லிட்டர் வீதம் தெளிப்பதன் மூலம் இந்நோய்களைப் பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விருத்தாசலம் வேளாண் அறிவியல் மையம் செப்டம்பர் மாத பயிற்சி விவரங்கள்

| வ.எண். | தலைப்பு &இடம் | நாள் |
|---|---|---|
| 1. | வேளாண் சமூக காடுகள்<br>**இடம் : உள்வளாக பயிற்சி** | 04.04.24 |
| 2. | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பம்<br>**இடம் : பூவிழுந்தநல்லூர்** | 06.09.24 |
| 3. | மக்காச்சோளத்தில் படை புழு மேலாண்மை<br>**இடம் : இளங்கியனூர்** | 10.09.24 |
| 4. | நெல் பயிரில் களை மற்றும் நீர் மேலாண்மை<br>**இடம் : வாழக்கோலை** | 11.09.24 |
| 5. | செறிவூட்டப்பட்ட மண் புழு உரம் உற்பத்தி<br>**இடம் : உள்வளாக பயிற்சி** | 12.09.24 |
| 6. | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பம்<br>**இடம் : மானியமாடூர்** | 13.09.24 |
| 7. | தக்காளி யில்மதிப்புவூட்டுதல் பயிற்சி<br>**இடம் : உள்வளாக பயிற்சி** | 13.09.24 |
| 8. | வாழையில் உர மேலாண்மை<br>**இடம் : ராமாபுரம்** | 17.09.24 |
| 9. | மக்காச்சோளத்தில் உயர் சாகுபடி தொழில் நுட்பங்கள்<br>**இடம் : தொழுதூர்** | 18.09.24 |
| 10. | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பம்<br>**இடம் : தெம்மூர்** | 19.09.24 |
| 11. | தா வே ப நானோ ரிவைவ் மற்றும் ரைய்ஸ்ப்ளூம் செயல் விளக்கம்<br>**இடம் : குமாரமங்கலம்** | 20.09.24 |
| 12. | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பம்<br>**இடம் : பரிவிளாகம்** | 21.09.24 |
| 13. | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பம்<br>**இடம் : சிறுகளூர்** | 23.09.24 |
| 14. | நீரில் கரையும் உரங்கள்<br>**இடம் : உள்வளாக பயிற்சி** | 26.09.24 |

15. மணிலாவில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்
**இடம் : கொண்டசமுத்திரம்** 27.09.24

16. உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள்
**இடம் : உள்வளாக பயிற்சி** 24.09.24

17. உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை கொண்டு இணை உணவு தயாரித்தல்
**இடம் : கத்தாழை** 27.09.24

18. உளுந்து பயிரில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள்
**இடம் : வடமூர்** 30.09.24

இதனை திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.



# பயறு வகைகள் எண்ணெய்வித்து பயிர்களில் நீர் மேலாண்மை பயிற்சி முகாம்

கிருஷ்ணகிரி, ஆக.31

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் எண்ணேகொள் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தலைமையில் பயறு வகைகள் எண்ணெய்வித்து பயிர்களில் நீர் மேலாண்மைப் பற்றிய பயிற்சியில் காராமணி, உளுந்து, பச்சைப்பயறு, துவரை, கொள்ளு ஆகிய பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மற்றும் நீர் மேலாண்மை பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

வேளாண்மை அலுவலர், நடமாடும் மண் பரிசோதனை நிலையம், கிருஷ்ணகிரி சோனியா, மண் மாதிரி சேகரித்தலின் முக்கியத்துவம், மண் மாதிரி சேகரிக்கும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்க மளித்தார். மேலும் விவசாயிகள் சேகரிக்கப்பட்ட மண் மாதிரியை மாதிரி பரிசோதனை செய்து பயணடைந்தனர்.

துணை வேளாண்மை அலுவலர் இராமநாதன், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டுவது பற்றியும் சூடோமோனாஸ், டி.விரிடி உயிர் உரங்களின் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் தேவராஜ் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும், வேளாண்மைத் துறையில் கொடுக்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். உதவி தொழில்நுட்பமேலாளர் பாரதிராஜா மற்றும் பஞ்சாயத்து தலைவர் சார்பாக சத்தியராஜ் இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை செய்தார்கள். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த முறையில் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பத் துண்டுபிரசுரங்கள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
1.15% Powder Formulation
Net Content 1 kg
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# விதை விற்பனை நிலையங்களில் ரூ.130 இலட்சம் மதிப்புள்ள விதைகள் விற்கத்தடை

சேலம், ஆக.31

சென்னை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை இயக்குனரது ஆணையின்படி தரமான விதைகள் விவசாயிகள் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் மற்றும் விதை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். ஆய்வின் போது இருப்பு பதிவேடு, பகுப்பாய்வுச் சான்று, பதிவுச்சான்று, கொள்முதல் பட்டியல்கள், விற்பனைப் பட்டியல்கள் ஆகியவை சரிபார்க்கப்படுகிறது.மேலும், விதை மூட்டைகள் மரக்கட்டைகளின் மீது முறையாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கிறதா எனவும், உரம் மற்றும் பூச்சி மருந்துகளிலிருந்து தனியாக இருப்பு வைக்கப்பட்டிருக்கிறதா எனவும் ஆய்வு செய்தனர்.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட விதை விற்பனை நிலையங் களில் விற்பனை செய்யப்படும் விதைகளின் முளைப்புத்திறன், இனத்தூய்மை மற்றும் பிடி நஞ்சு போன்றவற்றை உறுதி செய்யும் பொருட்டு விதை ஆய்வாளர்களால் 2946 விதை மாதிரிகள் எடுத்து பகுப்பாய்விற்காக சேலம் மற்றும் கோயம்புத்தூர் அரசு விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பரிசோதனைகளின் முடிவறிக்கையின்படி 43 விதை மாதிரிகள் தரக்குறைவானது என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.74 இலட்சம் மதிப்புள்ள 14 மெட்ரிக் டன் விதைகள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டு சம்மபந்தப்பட்ட நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. இதர விதிமீறல்கள் கண்டறியப்பட்ட விதை விற்பனை நிலையங்களில் ரூ.56 இலட்சம் மதிப்புள்ள 12 மெட்ரிக் டன் விதைகளுக்கு சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் (பொ) பெ.சுமதி விற்பனைத்தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

தரமான விதைகளை விதை விற்பனை உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களிலிருந்து மட்டுமே வாங்கி பயன் பெற வேண்டும் எனவும் விவசாயிகளுக்கு விற்பனை இரசீது வழங்கும் போது அதில் விவசாயின் பெயர், முகவரி, கைபேசி எண், பயிர், இரகம், குவியல் எண், காலவதி தேதி, விற்பனை அளவு மற்றும் விவசாயியின் கையொப்பம் பெற்று வழங்குமாறு அறிவுறுத்தி உள்ளார். மேலும் விதை இருப்பு மற்றும் விலை விபரங்களை பயிர் மற்றும் இரகம் வாரியாக விவசாயிகளின் பார்வையில் தெரியும்படி விபரப் பலகை வைக்க அறிவுறுத்தியுள்ளார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 'தேனீ வளர்ப்பு மற்றும்தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்குதல்' நிகழ்ச்சி




கோயம்புத்தூர், ஆக.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பூச்சியியல் துறை, கோயம்புத்தூர் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனம், சென்னை இணைந்து மதுரம் திட்டத்தின் கீழான, பாலமலை மாவட்ட பழங்குடியின மக்களுக்கான 'தேனீ வளர்ப்பு பயிற்சி மற்றும் தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்குதல்' நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மதுரம் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், தேனீ பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு தேன் உற்பத்தியை அதிகப்படுத்துவதும் ஆகும். கோயமுத்தூர் மாவட்டம், பெரிய நாயக்கன் பாளையம் தொகுதி நாயக்கன்பாளையம் பஞ்சாயத்திற்குட்பட்ட பாலமலை கிராமத்தில் உள்ள பழங்குடியின மக்களிடையே அறிவியல் ரீதியான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல், வாழ் வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துதல் மேம்படுத்துதல் குறித்த பயிற்சி 28.8.24 (புதன் கிழமை) அன்று பல்கலைக்கழக பேராசிரியர்கள் பாலமலை பழங்குடியின மக்களுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சியை அளித்தனர்.

பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் வா.இரா.சாமிநாதன், இந்திய தேனீ கூடுகளை ஆய்வு செய்வதன் முக்கியத்துவத்தை விளக்கினார். பழங்குடியின மக்களுக்கு பல்வேறு தேனீ இனங்கள், வகைகள் மற்றும்தேனீக்கூட்டின் அமைப்பு ஆகிய வற்றை விளக் கினார். தேனீ கூட்ட உறுப்பினர்கள் (ராணி, ஆண் மற்றும் பணித் தேனீ) மற்றும் பருவகால மேலாண்மை, கூடு களை பிரித்து ஒன்றிணைத்தல் மற்றும் தேன் அறுவடை செய்தல் பற்றி செய்முறை விளக்கம் அளித்து விவரித்தார். பூச்சியியல் துறை இணை பேராசிரியர்முனைவர் G.பிரீத்தா, தேனீ வளர்ப்பு உப கரணங்களைக் கையாளுதல் மற்றும் பயன்கள் தொடர்பான தொழில்நுட்ப அமர்வைக் கையாண்டார். கோடை மற்றும் குளிர்காலம் போன்ற பற்றாக்குறை காலங்களில் தேனீக்களுக்கு அளிக்க வேண்டிய செயற்கை உணவு முக்கியத் துவம் பற்றியும் விளக்கமளித்தார். சர்க்கரை (1 கிலோ) மற்றும் தண்ணீர் (1 லிட்டர்) இரண்டையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து தேனீ கூட்டங்களுக்கு பெட்டிக்கு 200 மிலி என்ற அளவில் வழங்க வேண்டும் என்றார்.

தேனீ கடியிலிருந்து பாதுகாக்க மக்கள் தேனீ முகவலை, கையுறைகள் மற்றும் புகைகுழல் போன்றவற்றை பயன் படுத்தலாம். முழுவதும் சீல் செய்யப்பட்ட சூப்பர் சட்டத்தி லிருந்து மையவிலக்கு விசை மூலம் பிரித்தெடுக்கும் கருவியைப் பயன்படுத்தி தேனைப் பிரித்தெடுக்கவும் பயிற்சி அளித்தார். பின், பழங்குடியின மக்களிடம் தனது தேனீ வளர்ப்பு அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். பூச்சியியல் துறை முனைவர் சி.சௌமியா செயற்கை உணவு வழங்கும் முறையினை செய்முறையுடன் விளக்கினார். மேலும், பாலமலை மலையைச் சுற்றியுள்ள பல்வேறு தேனீ தாவரங்கள், மற்றும் தேனீக்களுக்கு உணவளிக்கும் பயிர்கள் குறித்தும் அவர் தெரிவித்தார்.அதனுடன், புகைப்பான் மற்றும் தேன் எடுக்கும் முறையினையும் செயல் முறை விளக்கதுடன் செய்து காண்பித்தார்.

எல்.வெள்ளிங்கிரி (பெருக்கப்பதி), வீட்டு முற்றத்தில் தேனீக்களை வெற்றிகரமாக பராமரித்து வருகிறார். தேனீ கூட்டங்கள் நல்ல நிலையில் உள்ளது குறித்து பேசினார். இப்போதெல்லாம், அவர் கையுறைகள் அல்லது முக்காடு பயன்படுத்தாமல் தேனீக்களைக் கையாளுகிறார். காலனிகளில் இருந்து இரண்டு முறை தேன் எடுக்கப்பட்டுள்ளது எனவும், அது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது எனவும் கூறினார். தேனானது சத்தான உணவு மட்டுமல்லாமல் கூடுதல் வருமானதிற்க்கும் உதவுகிறது. தேனீயானது தேனீ வளர்ப்பவர்களுக்கு செல்லப்பிராணியாக மாறிபோனது எனவும் கூறினார்.



# சூளகிரி வட்டாரத்தில் துவரை நாற்று நடவு குறித்த விவசாயிகள் பயிற்சி

கிருஷ்ணகிரி, ஆக.31

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் 2024-25ம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் அகரம் அக்ரஹாரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு, துவரை நாற்று நடவு குறித்த விவசாயிகள் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஜான் லூர்து சேவியர் தலைமை தாங்கினார். அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அத்திமுகம் உதவி பேராசிரியர் புவனேஸ்வரி, தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவசங்கரி, தோட்டக்கலை துணை அலுவலர் கோவிந்தராஜ், உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கூறியதாவது KAVIADP திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு வேளாண்மை துறையில் வழங்கப்படும் திட்டங்கள், மானியங்கள், இடுபொருட்கள், உபகரணங்கள், பண்ணைக்கருவிகள் குறித்து விளக்கி கூறினார்.

அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அத்திமுகம் உதவி பேராசிரியர் புவனேஸ்வரி கலந்து கொண்டு நீண்ட கால துவரை நாற்று நடவு வகைகளை தேர்ந்தெடுக்கவும் மானாவாரி யாகவோ அல்லது பாசன வசதியிலோ ஆகஸ்ட் மாதத்துக்குள் நடவு செய்ய வேண்டும் 6X4 அங்குல அளவு மற்றும் 200 மைக்ரான் தடிமன் கொண்ட பாலி பையைத் தேர்ந்தெடுக்கவும் பாலி பையில் சொந்த மண்ணை நிரப்பவும் மணல் மற்றும் தண்ணீர் தேங்காமல் இருக்க கீழே 3-4 துளைகள் போடவும். விதைகளை 0.2% கால்சியம் குளோரைடில் ஒரு மணி நேரம் ஊறவைத்து 7 மணி நேரம் நிழலில் உலர்த்தவும். கடினப்படுத்தப்பட்ட விதைகளை டி.விரைடு @ 4 கிராம்/கிலோ மற்றும் 100 கிராம் ரைசோபியம் மற்றும் 100 கிராம் பாஸ்போ பாக்டீரியத்துடன் நேர்த்தி செய்ய வேண்டும். விதைகளை @2/பாலி பையை 1 செமீ ஆழத்தில் விதைக்கவும் நடவு செய்வதற்கு 30-45 நாட்களுக்கு முன்பு விதைகளை பாலிபைகளில் விதைக்கவும். நடவு செய்வதற்கு 3 வாரங்களுக்கு முன்பு வயலை ஆழமாக உழவும். நடுத்தர முதல் ஆழமான மண்ணில் நீண்ட கால இரகங்களை வளர்ப்பதற்காக, தூய பயிர்களுக்கு 5’ X 3’ மற்றும் 6’ X 3’ என்றளவில் 15 சதுர செ.மீ

குழிகளை தோண்டவும், பாசன நிலையில் ஊடுபயிராக பயிரிடவும். மானாவாரியில் 5'X3' இடைவெளியில் குழிகளை தோண்டவும். குறுகிய கால வகைகளுக்கு 3' X 2' இடைவெளியில் 15 சதுர செ.மீ குழி தோண்டவும். நீர் தேங்கி நிற்கும் நிலையில், குழிகளை தோண்டுவதற்கு முன் பள்ளங்களை அமைக்கவும் நடவு செய்த 20-30 நாட்களில் 25:50:25 கிலோ NPK / எக்டருக்கு கனிம உரங்களை யூரியா, டிஏபி மற்றும் பொட்டாஷ் என நாற்றுகளைச் சுற்றி இடவும். ZnSO4 @ 25 கிலோ/எக்டரை அடிப்பகுதியாக FYM அல்லது மணலுடன் சேர்த்து இடவும். நடவு செய்த 20 - 30 நாட்களில் செடிகளின் நுனியில் (5 செ.மீ. அகற்றுதல்) முனை வளர்ச்சியைத் தடுக்கவும். பூ உதிர்வதைக் கட்டுப்படுத்த பிளானோ ஃபிக்ஸ் @ 0.5 மிலி/லிட்டர் தெளிக்கவும் என்று விளக்கி கூறினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவசங்கரி கூறியதாவது தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவசமாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்வேந்தன் நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பண்ணை கருவிகள், தார்பாலின், பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க்சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் விதை நேர்த்தி செய்வதன் அவசியம், சொட்டு நீர்பாசனத்திற்கு வழங்கப்படும் மானியம், பயிர் காப்பீடு திட்டத்தின் அவசியம் லுளீளீ கார்டு பெற தகுதியான பயனாளிகள் செய்ய வேண்டிய வழிமுறைகள் உழவன் செயலியின் அவசியம் மற்றும் உழவன் செயலி பதிவிறக்கம் செய்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் சொட்டுநீர்பாசன நிறுவனங்கள் கலந்து கொண்டனர். மேலும் பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் குறித்த கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## நிலக்கடலையில் காய் வடு நூற்புழு (காளஹஸ்தி நோய்) அறிகுறிகள்

இலை–வெளுத்து வளர்ச்சி குன்றியிருக்கும். காய்–பழுப்பு நிற வடுக்கள் தென்படும். விதைகள்–கருப்பு நிறத்தில் காணப்படும். வேர் – நிற மாற்றம்.

**கட்டுப்பாடு :** எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களைப் பயன் படுத்தவும். செண்டுமல்லி உள்ளிட்ட பயிர்களைக் கொண்டு பயிர் சுழற்சி செய்யவும். விதைத்து 25–30 நாட்களுக்குப் பின், கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 4% குருணை 18.75 25 கிலோ/எக்டர் மண்ணில் இடவும். ஜிப்சம் 200 கிலோ / எக்டர் கொண்டு மண் அணைக்கவும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

## எள் உற்பத்தியில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி

நாமக்கல், ஆக.31

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம், மாவு ரெட்டிப்பட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் எள் உற்பத்தியில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் தலைப்பில் கீழ் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடத்தப் பட்டது. பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் ராமசாமி எள் சாகுபடியில் மண் மற்றும் நீர் பரிசோதனையின் முக்கியத்துவம் உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி முறைகள், நுண்ணூட்ட பயன் பாட்டின் பயன்கள், உர மேலாண்மை போன்ற சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்து விவசாயிகளின் சந்தேகங் களுக்கு விளக்கமளித்தார். பயிற்சியில் வைத்தியலிங்கம், துணை வேளாண்மை அலுவலர் (ஓய்வு) கலந்து கொண்டு விவசாயிகளுக்கு எள் பயிர்கள் சாகுபடியில் மண் பரிசோதனை முதல் அறுவடை வரையிலான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைகள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள் பயன்பாடு மற்றும் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி விளக்கமளித்தார். உதவி வேளாண் அலுவலர் வெற்றிவேல், வேளாண்மை விரிவாக்க மையத்தில் வைக்கபட்டுள்ள இடுபொருட்கள் விபரங்கள் மற்றும் வேளாண்த் துறை மானிய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர் அட்மா திட்டத்தின் செயல் பாடுகளை பற்றி விரிவாக எடுத்து கூறினார்கள். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர் செய்திருந்தனர்.